Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **280/2020**
**Depostitions of PW- 2 Witness for**

| | |
|---|---|
| Name | மேரி நிர்மலா |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2023.

Signature of Witness.

05.12.2023

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாட்டக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். டீச்சராக வேலை செய்து வருகிறேன். இன்னாசியம்மாள் எனது அம்மா. அசா.1 எனது அப்பா. எனது அம்மா இன்னாசியம்மாள் தற்போது இறந்து விட்டார். 2.3.2019 ம்தேதி இந்திரா நகரில் உள்ள அன்னை வேளாங்கன்னி சர்ச் திறப்பு விழாவிற்காக நானும் எனது அப்பா, அம்மாவும் போனோம். மாலை 6.30 மணிக்கு திருப்பலி சர்ச்சில் ஆரம்பித்தார்கள். அது முடிந்து சுமார் 9 மணியளவில் அன்னதானத்தில் சாப்பிடுவதற்காக நானும்எனது அப்பா, அம்மாவும் சர்ச்சுக்கு இடது பக்கம் உள்ள அன்னதானம் நடைபெற்ற இடத்திற்கு போனோம். சாப்பாடு

வாங்கி விட்டு வரும்போது எனது அம்மா கழுத்திலிருந்த 5 1/2 பவுன் த ங்க முறுக்கு செயின் தாலியுடன் இருந்ததை காணவில்லை. அன்றையதினம் மிகவும் நேரம் அதிகமாகி விட்டதால் காவல் நிலையத்திற்குமறு நாள் சென்று புகார் கொடுத்தோம். எனது அம்மா புகார் மனு கொடுத்தார். அதே வருடம் டிசம்பர் மாதத்தில் போலிஸ் எங்களை தொடர்பு கொண்டு காணாமல் போன நகை கிடைத்து விட்டதாக சொன்னார்கள். மணிமாலா என்பவர் செயினை எடுத்ததாக சொன்னார்கள். மேற்படி தங்க செயினை நாங்கள் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டோம். என்னிடம் கா ட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அசா.பொ.1 செயின் தான் எனது அம்மாவின் செயினாகும். அதுதான் காணாமல் போனது. அதை நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்றுக்கொண்டோம். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.